Series P/PB2/1

SET 1

CLASS X PRE-BOARD EXAMINATION – 2025-26

Q.P. Code: 006/2/1

Roll No. | | | | | | | | |

Candidate must write the Q.P. Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **10** printed pages.
- Please check that this question paper contains **14** questions.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- **Please write down the serial number of the question in the answer-book before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

தமிழ்
TAMIL

கால அளவு: 3 மணி | **மொத்த மதிப்பெண்கள்: 80**

Time allowed : 3 hours | *Maximum Marks : 80*

General Instructions:

Read the following instructions very carefully and strictly follow them :

1. *This question contains **FIVE** sections.*
2. *It has total **14** questions.*
3. *Section **A** – Contains **2** questions (10 marks). [Question No. **1 to 2**]*
4. *Section **B** – contains **4** questions (12 marks). [Question No. **3 to 6**]*
5. *Section **C** – contains 4 questions (31 marks). [Question No. **7 to 10**]*
6. *Section **D** – contains **1** question (10 marks). [Question No. **11**]*
7. *Section **E** – contains **3** questions (17 marks). [Question No. **12 to 14**]*
8. *Attempt as per specific instructions for each question.*

SECTION-A (READING) 10 MARKS

பகுதி – அ (படித்தல் திறன்) 10 மதிப்பெண்கள்

1.பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக. (5x1=5)

சைவசித்தாந்த முப்பொருள்களில் பாசம் என்பது மூன்றாவது பொருளாகும். இதனைத் தளை என்றும் கூறுவர். பாசத்தளை என்று சேர்த்துச் சொல்வதும் உண்டு. பாசம் என்பது கயிற்றைக் குறிக்கும். தளை என்பது கட்டுவதைக் குறிக்கும். எனவே கட்டப் படுகின்ற கயிறு என்ற நிலையில் பாசங்கள் குறிக்கப் படுகின்றன. இப்பாசங்கள் மூன்று வகைப்படும். அவை ஆணவம், கன்மம், மாயை எனப்படும். ஆணவம் என்பது முதலாவது. செம்பு என்ற உலோகப் பொருள் என்றைக்கு உண்டோ அன்றே அதற்குக் களிம்பு இருப்பது போல, உயிர் என்று உண்டோ அன்றே அதற்கு ஆணவம் உண்டு. எனவே இதனை மூலமலம் என்று குறிப்பிடுவர். ஆணவம் என்ற சொல் சைவசித்தாந்த அடிப்படையில் செருக்கு என்ற பொருளைத் தராது. உயிரை அறியாமைப் படுத்தும் நிலையைக் குறிக்கும். சிறிது விளக்கமாகச் சொன்னால் கண்ணை மறைக்கின்ற இருள்போல உயிர்கள் எதிரில் உள்ள பொருள்களை அறிய முடியாத நிலையில் அவ்வுயிர்களுக்கு அறியாமையைத் தருவது ஆணவமாகும். இது ஆணவத்தின் முதல் நிலையாகும். அதாவது உயிர்களின் அறிவு, இச்சை, செயல் என்ற மூன்றனையும் நிகழவிடாது தடுத்து உயிர் என்ற ஒன்றே உண்டு என்பதே தோன்றாதவாறு மறைத்துத் தானேயாய் நிற்பது ஆணவமாகும். இதுதான் உயிர்களின் கேவலநிலை என்றும் ஆணவத்தின் முதல்நிலை என்றும் கூறப்படும்.

வினாக்கள்

(i) சைவசித்தாந்த முப்பொருள்களில் மூன்றாம் பொருள் எது?

(A) ஆணவம் (B) பதி

(C) பாசம் (D) மாயை

(ii) தளை என்பதன் பொருள் என்ன?

(A) செம்பு (B) கயிறு

(C) பாசம் (D) கட்டுதல்

(iii) மூலமலம் எது?

(A) கன்மம் (B) மாயை

(C) ஆணவம் (D) களிம்பு

(iv) சிந்தாந்தப்படி ஆணவத்தின் பொருள் யாது?

(A)செருக்கு (B) அறியாமை

(C) கோபம் (D) இருள்

(v) ஆணவம் எதை நிகழ விடாது?

(A) மனம், புத்தி, செயல் (B) அகங்காரம், விருப்பம், செயல்

(C) அறிவு, இச்சை, செயல் (D) அறிவு, ஆசை, பழவினை

2.பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. (5x1=5)

விடுதலைப் போராட்ட வீரர் இவர். 1910ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி அருகே உள்ள சங்கணான்குளம் கிராமத்தில் பிறந்தவர் .ஹோமியோபதி மருத்துவத்தில் ஈடுபாடு கொண்ட இவர், தன் அண்ணன் சுப்புவுடன் இலங்கைக்குச் சென்றார். அங்கே கொழும்பில் நடந்த சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டதால், குடும்ப உறுப்பினர்களின் வற்புறுத்தலுக்குப் பின் ஊர் திரும்பினார். வீட்டில், மருத்துவத்துக்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவதாகக் கூறிவிட்டு, மதுரையில் சுபாஷ் சந்திர போஸின் தலைமையை ஏற்று செயல்பட்டுக் கொண்டிருந்த முத்துராமலிங்கத்தேவரைச் சென்று சந்தித்தார். விடுதலைப் போராட்டத்திற்கு, தன்னுடைய ஆதரவைத் தெரிவித்தார். பின்னர் சுபாஷ் சந்திபோஸின் இந்தியத் தேசிய ராணுவப் படையில் சேர்ந்து சிங்கப்பூரில் பயிற்சி மேற்கொண்டார். அதன் பிறகு பின்னர் மலேசியா, பர்மா, தைவான் போன்ற நாடுகளில் சுபாஷின் படையில் பணியாற்றிய பூலோக பாண்டியனுக்கு 'நாயக்' (தலைவர்) என்ற

அந்தஸ்து வழங்கப்பட்டது.1944இல் நடைபெற்ற இரண்டாம் உலகப் போரில் கலந்துகொண்டு சிறை சென்றார். சிறையிலிருந்து தப்பி, மலேசியா சென்று 'ஜெய்ஹிந்த நிலையம்' என்ற பெயரில் நாளிதழ் கடை நடத்தினார். அவரைக் கண்டுபிடித்த ஆங்கிலேய அரசு, டில்லிக்குக் கொண்டு வந்து சிறையில் அடைத்தது..

வினாக்கள்

(i) பூலோக பாண்டியன் தன் அண்ணனுடன் எங்கு சென்றார்?

(ii) முத்துராமலிங்கத்தேவர் யாருடைய தலைமையை ஏற்று செயல்பட்டார்?

(iii) பூலோக பாண்டியன் எப்படையில் சேர்ந்தார்?

(iv) பூலோக பாண்டியன் நடத்திய கடையின் பெயரென்ன?

(v) பூலோக பாண்டியன் பெற்ற அந்தஸ்து யாது?

SECTION –B (Grammar) 12 Marks

பகுதி – ஆ (இலக்கணப்பகுதி) 12 மதிப்பெண்கள்

3.சான்று தருக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) **(3x1=3)**

(i) இசைநிறைஅளபெடை – மொழிமுதல்

(A) வெஃகுவார் (B) நல்லபடாஅ

(C) ஓஒதல் வேண்டும் (D) உழாஅர்

ii) இருபெயரொட்டுப்பண்புத்தொகை

(A) செந்தமிழ் (B) பழமொழி

(C) தமிழ்மொழி (D) செம்மொழி

(iii) விளித்தொடர்

(A) எங்கே சென்றாய் (B) எழுந்து வா

(C) தம்பீ படி (D) வா வா வா

(iv) முன்னிலை பன்மை

(A) கற்றாய் (B) கற்றீர்கள்

(C) கற்றார்கள் (D) கற்பிப்பர்

(v) முதற்பொருள்

(A) சிறுகுடி (B) ஆயர்

(C) முருகன் (D) வைகறை

4.கோடிட்ட இடங்களை நிரப்புக: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)

(i) ..... தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும்.

(A) தொழிற்பெயர் (B) வினையாலணையும் பெயர்

(C) எச்சவினை (D) வினைத்தொகை

ii) காலங்கரந்தபெயரெச்சம் என அழைக்கப்படுவது.....

(A) அன்மொழித்தொகை (B) பண்புத்தொகை

(C) வினைத்தொகை (D) உம்மைத்தொகை

(iii) ஒரே சொல் உவகையின் காரணமாக மீண்டும் மீண்டும் வருவது.....

(A) அடுக்குத் தொடர் (B) வேற்றுமைத் தொடர்

(C) வினையெச்சத் தொடர் (D) இரட்டைக்கிளவி

(iv) வழு ..... வகைப்படும்.

(A)ஆறு (B) எட்டு

(C) ஐந்து (D) ஏழு

(v) வினாவிற்கு விடையாக ஏற்கெனவே நேர்ந்ததைக் கூறுவது.....விடை

(A) இனமொழி (B) உற்றது உரைத்தல்

(C) உறுவது கூறல் (D) வினாவெதிர் வினாதல்

5.இலக்கணக் குறிப்பு எழுதுக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)

(i) வாகை சூடு – **சூடு**

(A) முதனிலைத் தொழிற்பெயர் (B) விகுதிபெற்ற தொழிற்பெயர்

(C) வியங்கோள் வினைமுற்று (D) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

(ii) சேரசோழபாண்டியர்

(A) அன்மொழித் தொகை (B) உம்மைத் தொகை

(C) முற்றுவினைத் தொடர் (D) எழுவாய்த் தொடர்

(iii) சூரியன் கிழக்கில் உதிக்கிறது.

(A) இடவழுவமைதி (B) மரபுவழுவமைதி

(C) காலவழுவமைதி (D) திணைவழுவமைதி

(iv) விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனை யவர்

(A) ஆற்றுநீர்ப் பொருள்கோள் (B) முறை நிரல்நிறைப் பொருள்கோள்

(C) தாப்பிசை பொருள்கோள் (D) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்

(v) கார்காலம்,மாலை

(A) மருதநிலப் பொழுது (B) முல்லைநிலப் பொழுது

(C) நெய்தல்நிலப் பொழுது (D) குறிஞ்சிநிலப் பொழுது

6.கூறியவாறு செய்க. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3x1=3)

(i) மாணவிகள் வந்தாள் (வழாநிலை ஆக்குக)

(A) மாணவி வந்தன (B) மாணவி வந்தார்கள்

(C) மாணவிகள் வந்தார்கள் (D) மாணவி வந்தது

(ii) முகநிலா(உவமைத் தொகையாக்குக)

(A) முழுநிலா (B) நிலாமுகம்

(C) வட்டநிலா (D) முகமன்ன நிலா

(iii) தண்ணீர் கிடைக்குமா? (கொடைவினாவாக்கு)

(A) தண்ணீர் வேண்டுமா? (B) தண்ணீரின் வேதிப் பெயர் யாது?

(C) தண்ணீர் தருவாயா? (D) இது கிணற்றுநீரா? ஆற்றுநீரா ?

(iv) காயா(பாலை நிலக் கருப்பொருளாக்குக.)

(A) வேங்கை (B) ஞாழல்

(C) காஞ்சி (D) இலுப்பை

(v) செய்வதும் (இன்னிசை அளபெடையாக்குக)

(A) செய்வதுஉம் (B) செய்வதூஉம்

(C) செய்வஅதும் (D) செய்ய்வதும்

SECTION –C (31 marks)

பகுதி – இ -(இலக்கியம்)

7.பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக. (3X1=3)

(i) அன்பிலன் ஆன்ற ..... தான்துவ்வான்

என்பரியும் ஏதிலான் துப்பு.

(A) அறிவிலன் (B) வினையிலன்

(C) துணையிலன் (D) அருளிலன்

(ii) இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்

உள்ளுள் ..... துடைத்து.

(A) மகிழ்வ (B) உவப்ப

(C) அழுவ (D) கொடுப்ப

(iii) .....எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு

(A) நற்பொருள் (B) செம்பொருள்

(C) எந்தப்பொருள் (D) எப்பொருள்

'8.பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து ,தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. (5X1=5)

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே",

வினாக்கள்

(i) இப்பாடல்வரிகள் இடம் பெற்றுள்ள நூல் யாது?

(A) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (B) கம்பராமாயணம்

(C) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் (D) காசிக்காணடம்

(ii) இப்பாடல்வரிகளை இயற்றியவர் யார்?

(A) கம்பர் (B) குமரகுருபரர்

(C) அதிவீரராம பாண்டியர் (D) குலசேகராழ்வார்

(iii) மீளாத்துயர் – பொருள்தருக.

(A) அறியாத்துன்பம் (B) தாங்காத் துன்பம்

(C) நீங்காத்துன்பம் (D) காணாத்துன்பம்

(iv) இப்பாடல் எத்தனையாவது திருமொழி?

(A) ஆறாம் (B) ஐந்தாம்

(C) மூன்றாம் (D) முதலாம்

(v) அடியேனே – அடியன் யார்?

(A) கபிலன் (B) திருமால்

(C) குலசேகராழ்வார் (D) மாவலி

9.பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு விடை தருக. **(2x4=8)**

(i) கார்கால காட்சி ஒன்றை சங்கஇலக்கியம் வழிவிவரி.

(ii) குகனின் வீரவுரையை விளக்குக.

(iii) காற்றை விளித்துப் பாரதியார் உரைப்பன யாவை?

(iv) வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் யாவை?

10. பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. **(3x5=15)**

(i) மொழிபெயர்ப்புக் கல்வி குறித்து எழுதுக.

(ii) அறவுணர்வும் தமிழர் மரபும் பற்றி எழுதுக.

(iii) செயற்கை நுண்ணறிவின் எதிர்காலச் செயல்பாடுகள் பற்றி எழுதுக.

(iv) காற்று வீசுகின்ற திசையைக் கொண்டு தமிழர்கள் காற்றுக்குச் சூட்டிய பெயர்களை விளக்குக.

(v) கலைஞரின் திரைத்துறைச் சாதனைகளை விளக்குக.

SECTION – D (10 marks)

பகுதி – ஈ (துணைப்பாடம்)

11..பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக.

(1x10=10)

(i) கோபல்லபுரத்து மக்கள்


(ii) விண்ணைத்தாண்டிய நம்பிக்கை

(iii) பாய்ச்சல்

SECTION – E (17 marks)

பகுதி – உ (படைப்பாற்றல்)

12. கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. **(3)**



13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று வரைக.

(i) உன் பள்ளியில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சி பற்றி நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது) **(1x8=8)**

(ii) உன் குடியிருப்புப்பகுதியில் கொசுக்களைக் கட்டுப்படுத்த வேண்டி சுகாதாரத்துறை உதவி இயக்குநருக்கு விண்ணப்பம் வரைக.

(உனது முகவரி அ.மதி , 21 அழகர் வீதி, முத்து நகர், தூத்துக்குடி)

14.பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. (1X6=6)

(i) முன்னுரை- இயற்கை உணவு– கீரைகள்- சத்துகள்- வாரம் ஒரு கீரை – கீரைகளின் பயன்கள்-முடிவுரை

(அல்லது)

(ii) முன்னுரை- கல்வி – இளமையில் கல் – பல்துறைக்கல்வி- வாழ்க்கை உயர்வு – சென்ற இடமெல்லாம் சிறப்பு- முடிவுரை

(அல்லது)

(iii) முன்னுரை - ஓவியம்- ஓவியவகைகள் -சித்தன்னவாசல்-தஞ்சைபெரிய கோவில் – இரவிவர்மா – தற்காலஓவியம் –முடிவுரை

****